வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | |
|---|---|---|
| 1) 3 | 6) 2 | 11) 1 |
| 2) 4 | 7) 4 | 12) 4 |
| 3) 2 | 8) 2 | 13) 3 |
| 4) 5 | 9) 5 | 14) 2 |
| 5) 3 | 10) 2 | 15) 5 |

(15X2=30 புள்ளிகள்)

16) அ) பண்டமாற்று முறை (1 புள்ளி)
ஆ) கொள்வனவாளர், விற்பனையாளர் (2X½ 1 புள்ளி)

17) அ) பண்டமாற்று (1 புள்ளி)
ஆ) கைத்தொழில் பொருள்கள் (1 புள்ளி)

18) அ) முகாமையாளர் (1 புள்ளி)
ஆ) நிறுவனக்கட்டமைப்பு (1 புள்ளி)

19) அ) வாடிக்கையாளர், அரசு (2X½ =1 புள்ளி)
ஆ) சந்தர்ப்பம், அச்சுறுத்தல் (2X½ =1 புள்ளி)

20) 1. பிழை
2. பிழை
3. சரி
4. பிழை (4X½ =2 புள்ளிகள்)

21) 1. வாடிக்கையாளர்
2. ஊழியர்கள்
3. உரிமையாளர்கள்
4. சமூகம் (4X½ = 2 புள்ளிகள்)

22) 1. உரிய நேரத்தில் பொருட்களை வழங்காமை
2. தரமான பொருட்களை வழங்காமல் விடுதல்
3. வழங்கலுக்காக நியாயமற்ற நிபந்தனைகளை விதித்தல்
4. விலைகள் தொடர்பான பேரம் பேசல்
5. தொடர்ச்சியாகப் போதுமான அளவு பொருட்களை வழங்காமை

(4X½ = 2 புள்ளிகள்)

23) 1. வருமானவரி
2. கம்பளிவரி
3. பெறுமதி சேர்வரி
4. தேச நிர்மாணவரி
5. உழைக்கும் போது செலுத்த வேண்டியவரி
6. பங்கு இலாபவரி (4X½ = 2 புள்ளிகள்)

24) 1. வட்டிவீதம்
2. ஒதுக்கு வீதத்தை மாற்றுதல்
3. திறந்த சந்தை நடவடிக்கை
4. கழிவு வீதத்தை மாற்றுதல்
5. கடன் அளவை வரையறுத்தல் (4X½ = 2 புள்ளிகள்)

25) 1. சுயேச்சையான தரம்
2. S.L.S சான்றிதழ் வழங்கும் முறைகள்
3. ஏற்றுமதிக்கு முன் பரிசோதனை முறைகள்
4. இறக்குமதி பரிசோதனை முறைகள்
5. ஏற்றுமதிக்காகக் தயாரிக்கப்படுகின்ற கடல் உணவு பரிசோதனையின் மூலம்

(4X½ = 2 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி – II

## பகுதி – I

01) i) மனிதனால் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய உடல், உள நிலைமைகளே மனித தேவைகள் எனப்படும். அத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பல்வேறு முறைகள் விருப்பங்கள் எனப்படும்.

(1 புள்ளி)

**வேறுபடுத்தல் :-**

1) தேவைகள் வரையறுக்கப்பட்டவை ஆனால் விருப்பங்கள் வரையறுக்கப்படாதவை
2) தேவைகள் சகலருக்கும் பொதுவானது விருப்பங்கள் தனி நபர்களுக்கிடையில் வேறுபட்டதாகக் காணப்படும்.
3) தேவைகள் வாழ்வதற்குக் கட்டாயமாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும் விருப்பங்கள் கட்டாயமாக நிறைவு செய்யத்தேவையற்றது.
4) தேவைகள் வணிகங்களினால் தோற்றுவிக்க முடியாது விருப்பங்கள் வணிகர்களினால் தோற்றுவிக்க முடியும்.
5) தேவைகள் சமூகத் தாக்கங்களினால் மாற்றம் செய்ய முடியாது விருப்பங்கள் சமூகத்தாக்கங்களால் மாற்றம் செய்ய முடியும்.

(2X½ 1 புள்ளி)

ii) 1) விற்பனை அல்லது பரிமாற்றம் இடம் பெறல்
2) பொருள்கள், சேவைகளில் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறல்
3) தொடர்ச்சியாக கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறல்
4) இலாபத்தினால் ஊக்கப்படுத்தப்படல்
5) நட்ட இடர் காணப்படல்
6) விருப்பங்களைத் தோற்றுவித்தல்
7) பொருளாதாரக் கருமமொன்றாக இருத்தல்

(4x½ = 02 புள்ளிகள்)

iii) 1) நுகர்வோனின் சுவை, வடிவம், கேள்வி என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள்
2) இயந்திரங்கள், உபகரணங்கள், உற்பத்தித் தொழிநுட்பம் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள்
3) சந்தையின் போட்டித்தன்மை அதிகரித்தல்
4) மூலப்பொருள்கள் பற்றாக்குறை, மின்சாரம் தடைப்படல், எரிபொருள் பற்றாக்குறை என்பவை ஏற்படுதல்.
5) பணியாளர்களின் பிரச்சினைகள், வேலை நிறுத்தம் போன்றவை காரணமாக
6) துப்பிடித்தல், கள்வர், பகைவர், இடையூறுகள் விபத்துக்கள் போன்ற அழிவுகள் காரணமாக
7) வணிகத்தின் வளப்பாவனை தொடர்பிலான முகாமையின் பிழையான தீர்மானம்.

(4x½ = 02 புள்ளிகள்)

iv) 1) மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்.
2) புத்துருவாக்கம்
3) தொழில் உருவாக்கம்
4) தேசிய பொருளாதார விருத்தி

(4x½ = 02 புள்ளிகள்)

v) 1) பண்டமாற்று

2) பணப்பாவனை

3) கைத்தொழில் புரட்சி

4) தகவல் பொருளாதாரம் (4x½ = 02 புள்ளிகள்)

02) i) i) பொருட் பயன்பாடு

2) உலோக வகைப்பயன்பாடு

3) உலோக நாணயப் பணப்பயன்பாடு

4) நாணயம், நாணயத்தாள்களின் பயன்பாடு

5) வங்கிப் பணப்பயன்பாடு

6) இலத்திரனியல் பணப்பயன்பாடு

ஒழுங்கு முறையில் குறிப்பிடவும்

4x½ = 02 புள்ளிகள்

ii) நேர் உற்பத்தி

சுய தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு தமக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் தாமே உற்பத்தி செய்தல்.

**உதாரணம்** :- பசு மாடுகள் சிலவற்றை வளர்க்கும் கிராமப்புற வீடொன்றில் பாவனைக்காக தயிர் உற்பத்தி செய்தல்.

விளக்கியிருப்பின் ½ புள்ளி

உதாரணம் ½ புள்ளி

**நேரில் உற்பத்தி**

சந்தையில் விற்பனை நோக்கத்திற்காக பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்.

விளக்கம் ½ புள்ளி

**உதாரணம்** :- மிகச்சிறிய கோழிப்பண்ணையொன்றை நடத்திச்செல்லும் ஒருவர் இதன் மூலம் கிடைக்கும் முட்டைகளை அருகிலிருக்கும் சில்லறை வியாபார நிலைத்திற்கு விநியோகித்தல்.

உதாரணம் ½ புள்ளி

iii) பொருட்கள் சேவைகள் பரிமாற்றம் செய்யும் பொழுது நடைபெறும் கொள்வனவு விற்பனை தொடர்பான நடைமுறைகளே வியாபாரம் ஆகும். ஆனால் வர்த்தகம் என்பது வியாபாரத்திலும் கூடுதலான ஒன்றாகும் வர்த்தகம் என்பது வியாபாரத்தையும் துணைச் சேவைகளையும் உள்ளடக்கியதாகும். துணைச்சேவைகள் மட்டும் வர்த்தகமாகாது எனவே வியாபாரம் இன்றி வர்த்தகம் இடம் பெற முடியாது.

(2 புள்ளிகள்)

iv) 1) இரட்டைப் பொருந்துகை இன்மை :-

பரிமாற்றத்தில் ஈடுபடும் இருவரினதும் தேவைகள் பொருந்துவது சிரமமாக காணப்பட்டது

2) பண்டங்களின் பிரிபடாத்தன்மை :-

தேவைக்கு ஏற்றவகையில் பண்டங்களை சிறுசிறு அலகுகளாக பிரித்து பரிமாற்றத்தில் ஈடுபடமுடியாமை.

3) பெறுமதியை அளவிட முடியாமை :-
பண்டங்களின் பெறுமதியை அளவிடுவதற்காக பொதுவான கருவி காணப்படவில்லை

4) சேமிக்க முடியாமை :-
பண்டங்களை எதிர்கால தேவைக்காக சேமித்து வைக்க முடியவில்லை.

5) கொண்டு செல்வது சிரமம் :-
பரிமாற்றத்தின் போது பண்டங்களை இடத்துக்கிடம் கொண்டு செல்ல வேண்டியிருத்தல்.

6) பிற்போடப்பட்ட கொடுப்பனவு கருவி இன்மை :-
கடன்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியாமை.

குறிப்பிட2x½ =1 புள்ளி

விளக்கம் 2x½ =1 புள்ளி

v)

| **உள்ளீடுகள்** | | **வணிகக்கருமங்கள்** | | **வெளியீடு** |
|---|---|---|---|---|
| **நிலம்**<br>**உழைப்பு**<br>**மூலதனம்**<br>**முயற்சி**<br>**தகவல்**<br>**காலம்**<br>**அறிவு** | → | நிர்வாகம்<br>உற்பத்தி<br>சந்தைப்படுத்தல்<br>நிதி<br>மனிதவளக்கருமங்கள்<br>ஆராய்ச்சியும்<br>அபிவிருத்தியும்<br>தகவல் முகாமைத்துவம் | → | பொருள்<br>அல்லது<br>சேவை |

முழுமையான விடை 2 புள்ளி

The National e-learning Portal for The General Education

03) i)

| பொருள்கள் | சேவைகள் |
|---|---|
| 1) பௌதிக நிலைப்புத் தன்மை கொண்டது. (தொட்டுணரக்கூடியது) | 1) பௌதிக நிலைப்புத் தன்மையற்றது. (தொட்டுணர முடியாது) |
| 2) களஞ்சியப்படுத்த முடியும் | 2) களஞ்சியப்படுத்த முடியாது |
| 3) ஓரினத்தன்மை கொண்டதாக இருக்குமாறு உற்பத்தி செய்ய முடியும். | 3) வழங்குனர்களுக்கேற்ப வேறுபடும் |
| 4) வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியும். | 4) வழங்குனரிடமிருந்து பிரிக்க முடியாது |

விளக்கம் 4x½ =2 புள்ளிகள்

iii) 1) பலங்களை அறிந்து கொள்ளல்
2) பலவீனங்களை அறிந்து கொள்ளல்
3) வணிக வாய்ப்புக்களை அறிந்து கொள்ளல்
4) அச்சுறுத்தல்களை அறிந்து கொள்ளல்

4x½ =2 புள்ளிகள்

iii) **நிறுவனக் கலாசாரம்**

| **பலம்** | **பலவீனம்** |
|---|---|
| 1) நேரான மதிப்பீடு மற்றும் நேரான முறைமையும் காணப்படல்<br>2) அதற்கேயுரிய விருத்தியடைந்த நடத்தை மற்றும் பழக்க வழக்கங்கள் காணப்படல் | 1) நேர் மதிப்பீடும் நேரான முறைமையும் காணப்படாமை<br>2) உயர் மேற்பார்வை காணப்படாமை |

**1 விடயம் ½ புள்ளி** **1 விடயம் ½ புள்ளி**

**நிறுவனக் கட்டமைப்பு**

| **பலம்** | **பலவீனம்** |
|---|---|
| 1) பொருத்தமானவாறு வேலைகளை பகிர்ந்தளித்தல்<br>2) பொருத்தமானவாறு ஒழுங்கமைப்பு கட்டியெழுப்பப்பட்டிருத்தல் | 1) வகிபாகங்களுக்கிடையே மோதல் உருவாதல்<br>2) பிரிவுகளுக்கிடையே சிறந்த இணைப்புக் காணப்படாமை. |

**1 விடயம் ½ புள்ளி** **1 விடயம் ½ புள்ளி**

The National e-learning Portal for The General Education

**மக்கட்சூழல்**

| **சந்தர்ப்பம்** | **அச்சுறுத்தல்** |
|---|---|
| ❖ சனத்தொகை அதிகரிக்கின்றமை காரணமாக பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரித்தல். | ❖ சனத்தொகை குறைகின்றமையால் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி குறைவடைதல். |

**½ புள்ளி** **½ புள்ளி**

**சட்டச்சூழல்**

iv)

| **சந்தர்ப்பம்** | **அச்சுறுத்தல்** |
|---|---|
| ❖ வணிகங்களுக்குச் சாதகமான சட்டத்திட்டங்கள் விதிக்கப்படும் போது அது சந்தர்ப்பம் ஆகும். | ❖ பாதகமான சட்டதிட்டங்கள் விதிக்கப்படும் போது அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். |

**½ புள்ளி** **½ புள்ளி**

**v) சமூகப்பொறுப்பு**

வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக் கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளல் சமூகப் பொறுப்பு எனப்படும். *(1 புள்ளி)*

**வணிக ஒழுக்க விழுமியம்**

வணிகம் தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினர்களுக்கும் நன்மை பயக்கக் கூடிய முறையில் நல்லவை தீயவை தொடர்பாக விளங்கிச் செயற்படல் வணிக ஒழுக்கவிழுமியம் எனப்படும்.

*(1 புள்ளி)*

04) i) 1) வணிகப் போட்டி

வணிக ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றாது தனித்து இலாப நோக்குடன் செயற்படல்.

2) பூகோளமயமாதல்

சூழல் மாசடைதல் உள்நாட்டு கலாச்சாரத்திற்கு பாதகமான மாற்றம்

3) இலத்திரனியல் வணிகம்

இலத்திரனியல் மோசடி, நுகர்வோர் ஏமாற்றப்படல்

4) சூழல் மாசடைதல்

இயற்கைச் சூழலை சிறப்பாக பேணாமையால் வணிகச் செயற்பாடுகள் காரணமாக காற்று, நீர், மண் என்பன மாசடைதல்

குறிப்பிட $2x\frac{1}{2} = 1$ புள்ளி
விளக்க $2x\frac{1}{2} = 1$ புள்ளி

ii) 1) வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படல்
2) வணிகத்தின் நன்மதிப்பு (வணிகம் பற்றிய பிரதி விம்பம்) விருத்தியடைதல்
3) வணிகம் தொடர்பான நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுதல்
4) வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடிதல்
5) வணிகத்தின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றுவது இலகுவாயிருத்தல்

*($4x\frac{1}{2} = 2$ புள்ளிகள்)*

iii) 1) சூழல் நேயப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்
2) உற்பத்தி நடவடிக்கைகளின் போது மூலப்பொருள்கள், வலு, நீர் போன்ற வளங்களைப் பாதுகாத்து கருமமாற்றுதல்
3) கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் போது 3R,4R,5R எண்ணக்கருக்களைப் பயன்படுத்துதல்.
4) சூழல் நேயப் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துதல்
5) ஆபத்து விளைவிக்கும் பொருள்களைப் பாதுகாப்பாக பயன்படுத்துதல்
6) நீர், காற்று, மண் போன்றவற்றின் மாசடைதலைக் குறைத்தல்
7) உயிரினங்களின் பல்லினத்தன்மையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
8) சூழல் சட்டதிட்டங்களுக்கமைய கருமமாற்றுதல்
9) சூழல் பாதுகாப்பு / சூழலை நேசிக்கும் கருமங்களின் போது அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கருமமாற்றல்.
10) சூரிய சக்தி போன்ற சூழலுக்குத் தீங்கிழைக்காத வலுச்சக்திகளைப் பயன்படுத்தல்.

*($4x\frac{1}{2} = 2$ புள்ளி)*

iv) 1) குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருளொன்றை உயர் பெறுமானமுடைய உற்பத்தி பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல் (upcycle) (½ புள்ளி)

**உதாரணம் :-** வைக்கோலிலிருந்து கடதாசி உற்பத்தி செய்தல். (½ புள்ளி)

2) உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தியினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல் (Lowcycle) (½ புள்ளி)

**உதாரணம் :-** யப்பானிய பாவனையிலிருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல். (½ புள்ளி)

v) உற்பத்திக் கருமத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற இயற்கை வளங்களில் மீள் உருவாக்கம் செய்யக்கூடிய வளங்களை மீண்டும் சூழலிலுள் உருவாக்குதல் என்பதாகும்.

**உதாரணம் :-**

1) காட்டிலுள்ள மரப்பலகைகளை மூலப்பொருளாகப் பயன்படுத்துகின்ற நிறுவனமொன்று காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தல்.

2) மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீள்வளர்ப்பை மேற்கொள்ளல்.

விளக்கத்திற்கு 1 புள்ளி

உதாணரம் 1 புள்ளி

05) i) 1) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்

உதாரணம் :- மின்சார வசதிகளை வழங்கல்

2) போட்டியாளரொருவராகச் செயற்படல்

உதாரணம் :-

- தனியார்துறை தொலைக்காட்சி அலவரிசையுடன் போட்டியிடக்கூடியவாறு அரச துறையின் தொலைக்காட்சிச் சேவைகளைச் செயற்படுத்தல்
- நெல் கொள்வனவு
- சத்தோச ஊடக பொருள்களை விற்பனை செய்தல்

3) வாடிக்கையாளரொருவராகச் செயற்படல்

உதாரணம் :- பல்வேறு அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.

4) கொள்கைகளை உருவாக்கல்

உதாரணம் :- நிதிக்கொள்கை இறைக்கொள்கை என்பவற்றை நடைமுறைப்படுத்தல்

5) சட்டதிட்டங்களை உருவாக்கல்

உதாரணம் :-

- நுகர்வோர் விவகார அதிகாரச்சட்டம்
- இலங்கை தரக்கட்டளைச் சட்டம்

6) வரி அறவீட்டாளரொருவராகச் செயற்படல்

உதாரணம் :- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினூடாக வரி அறவிடல்

குறிப்பிட 2x½ =1 புள்ளி

உதாரணம் 2x½ =1 புள்ளி

The National e-Learning Portal for The General Education

ii) *1)* வரிக்கொடுப்பனவு

*2)* உற்பத்திக்கு உள்நாட்டு வளப்பயன்பாடு

*3)* அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளை பின்பற்றுதல்

*4)* சட்டதிட்டங்களைப் பயன்படுத்தல்

*5)* வேலை வாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்

*6)* சூழல் மாசடைவதை இழிவுபடுத்தல்

(4x½ =2 புள்ளிகள்)

iii) பொருட்கள் சேவைகளின் மீது சேர்க்கப்பட்ட பெறுமானத்திற்கு அறவிடப்படும் வரி பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாகும்.

விளக்கியிருப்பின் ½ புள்ளி

உதாரணம் :- மொத்த சில்லறை வியாபாரத்தின் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

- இறக்குமதி மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

உதாரணம் ½ புள்ளி

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்காக சங்கத்தினால் அறவிடப்படும் வரியாகும்.

விளக்கியிருப்பின் ½ புள்ளி

உதாரணம் :-

- மோட்டார் வாகன இறக்குமதி வரி
- உணவுப்பொருட்களுக்கான இறக்குமதி வரி

உதாரணம் ½ புள்ளி

iv) வணிகவங்கிகளும் முதல் நிலை வியாபாரிகளும் அவர்களின் மேலதிக நிதியினை மத்திய வங்கியிலுள்ள அரசின் பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்யும் போது செலுத்தப்படுகின்ற வட்டிவீதமாகும். (1 புள்ளி)

வணிக வங்கிகளும், முதல் நிலை வியாபாரிகளும் அரசின் பிணைகளை ஈடாக வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியினைப் பெற்றுக் கொள்ளும் போது அறவிடப்படும் வட்டி வீதமாகும். (1 புள்ளி)

v) விருத்திச் செலவுகள் :-

அரச சேவைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக வருடமொன்றில் மீண்டும் மீண்டும் இடம் பெறக்கூடிய செலவுகள் இவற்றை மீளெழும் செலவுகள் எனவும் அழைக்கப்படும்.

விபரிக்க ½ புள்ளி

உதாரணம் :-

- சம்பளமும் கூலியும்
- வட்டிக்கொடுப்பனவுகள்

உதாரணம் ½ புள்ளி

மூலதனச் செலவுகள் :-

அரசினால் நீண்டகால முதலீடுகளுக்காக மேற்கொள்ளும் செலவுகளே மூலதனச் செலவுகளாகும்.

விபரிக்க ½ புள்ளி

உதாரணம் :-

- வீதி நிர்மாணம்
- பாலங்கள் நிர்மாணம்

உதாரணம் ½ புள்ளி

06) i) 1) சந்தையில் பொருள்கள் சேவைகள் பரவலாகக் காணப்படல்.
2) போட்டித்தன்மை அதிகரிப்பது சந்தையில் மோசடிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருத்தல்.
3) சுதந்திரமான வியாபாரம் காரணமாக சந்தை சிக்கல் கொண்டதாகக் காணப்படல்
4) பூகோளமயமாதலுடன் ஏற்படக்கூடிய சமூக கலாச்சார சீரழிவுகள்.
5) சூழல் மாசடைதலைத் தவிர்ப்பதற்காக நுகர்வோர்களை அறியச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருத்தல்.

விபரிக்க 4½ = 2 புள்ளிகள்

ii) நுகர்வோர் பகுத்தறிவுள்ளவராக இருப்பதனால் செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானத்துடன் கூடியதுமான தரத்துடன் கூடியதுமான பொருள்களைத் தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுவர். அதே போன்று சந்தை மோசடிகள், நுகர்வோர் உரிமைகள் மீறல் என்பன தொடர்பாக உரிய அதிகாரிகள் மூலம் அறியச் செய்யப்பட்டு குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் வாழ்வதற்கான சூழலைப்பாதுகாத்து, சமூகம் தொடர்பாக கவனம் செலுத்தி இணக்கப்பாட்டுடன் கருமமாற்றிப் பகுத்தறிவுள்ள நுகர்வோரொருவராகச் சந்தையில் செயற்படுவார். (2 புள்ளிகள்)

iii) 1) அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியமங்களுக்கேற்ப உற்பத்தி செய்தல் வழங்கல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, விற்பனை செய்தல் என்பவற்றின் காரணமாக வீணாதல் குறைவடைந்து இலாபம் அதிகரித்தல்.
2) நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் காவனம் செலுத்துவதன் காரணமாக நுகர்வோரின் நம்பிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
3) வணிக முறைகேடுகளைத் தவிர்த்துச் செயற்படுவதன் காரணமாக நிறுவனம் தொடர்பான மனப்பாங்கு (பிரதிவிம்பம்) விருத்தியடைதல்.
4) வணிகருக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படுகின்ற சட்டரீதியான சிக்கல்கள் குறைவடைதல்
5) வணிகங்களுக்கிடையில் ஏற்படுகின்ற தேவையற்ற போட்டி நிலைமை குறைவடைதல்
6) தன்னாதிக்க நிலைமைகள் தோன்றாமை காரணமாக நியாயமாகப் போட்டியிட முடிதல்

(4½ = 2 புள்ளிகள்)

iv) 1) எழுத்தாவணங்களின்றி வணிகத் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ள முடிதல்.
2) வணிக நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள முடிதல்.
3) செயற்பாட்டுக்கிரயம், இருப்புக்கிரயம் என்பன குறைவடைதல்
4) பூகோளமய ரீதியான சந்தையொன்றிற்கான சந்தர்ப்பம் உருவாதல்.
5) வாடிக்கையாளர்களது சிரமங்கள், நேரம் குறைவதுடன் சேமிக்கப்படல்.
6) கணினி அறிவு அதிகரித்தல்
7) உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தியடைதல் (4½ = 2 புள்ளிகள்)

v) 1) SLS குறியீட்டுடனான உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் போட்டிகளுக்கு சிறப்பாக முகம் கொடுக்க முடிதல்.
2) SLS குறியீட்டுகளற்ற உற்பத்தி நிறுவனங்களையும் விட அனு கூலமான நிலைமை யொன்றினைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
3) நுகர்வோர் முறைப்பாடுகளை இழிவு படுத்தக்கூடியதாக இருத்தல்.
4) அரசதுறையானது SLS குறியீடுகளுடனான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கே முதலிடம் அளிப்பதால் சந்தைப்பங்கை விரிவுபடுத்த முடியுமாயிருத்தல்.
5) சர்வதேச தரக்குறியீட்டினைப் ISO பெற்றுக்கொள்வதன் மூலம் வெளிநாட்டுச் சந்தையில் வெற்றி பெறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
6) விரயமடைதல் குறைவடைந்து வினைதிறனானது விருத்தியடைதல்
7) நிறுவனம் தொடர்பில் நல்ல பிரதி விம்பம் உருவாகி ஊழியரின் எண்ணக்கோலங்கள் விருத்தியடைதல். (4½ = 2 புள்ளிகள்)